# Avinashilingam Institute for Home Science and Higher Education for Women
## Coimbatore – 641 043

## Master's Degree Examination – November 2017
## III Semester

Time : 3 Hours
Max.Marks: 60

Class : II PG
Major : Tamil

## 12MTMC20 பாரதியார் பாடல்கள் (Self Study)

### பகுதி - அ

10 x ½ = 5

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. "முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில் முப்பது கோடியும் வீழ்வோம்" என்ற பாரதியின் கூற்று எப்பாடல் பகுதியில் இடம் பெற்றது.
   அ. விடுதலை இயக்கம் ஆ. பாரத தேசம்
   இ. தேசியத் தலைவர்கள் ஈ. தமிழ்மொழி

2. பாரதியின் புதுக்கவிதை முன்னோடி யார் ?
   அ. வல்லிக்கண்ணன் ஆ. பராசக்தி
   இ. ஷெல்லி ஈ. வால்ட் விட்மன்

3. எது புண்ணியம்
   அ. ஏழைக்கு எழுத்தறிவித்தல் ஆ. யாத்திரை
   இ. ஜீவகாருண்யம் ஈ. கடமையைச் செய்தல்

4. பாரதியின் பாடல்களில் மணிமகுடம்
   அ. சஞ்சீவிபர்வதத்தின் சாரல் ஆ. பாண்டியன்பரிசு
   இ. கண்ணன்பாட்டு ஈ. இருண்டவீடு

5. "தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும்" என்றவர்
   அ. துரியோதனன் ஆ. தருமன்
   இ. விதுரன் ஈ. விசயன்

6. பாரதியார் பாடல்களை முதன்முதலாக வெளியிட்டவர்
   அ. சுந்தரம்பிள்ளை ஆ. பாண்டித்தேவர்
   இ. கிருஷ்ணசாமி ஐயர் ஈ. கருப்பத்தேவர்

7. பாரதியின் பாடல்களை நாட்டுடைமையாக்கியவர்
   அ. ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியார் ஆ. சுப்புரெட்டியார்
   இ. கனகசுப்புரத்தினம் ஈ. இராமலிங்கம்

8. குழந்தைகளுக்காக பாரதி பாடிய பாடல்கள்
   அ. குயில்பாட்டு ஆ. கண்ணன் பாட்டு
   இ. தேசிய கீதங்கள் ஈ. பாப்பாப்பாட்டு

9. சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைக்க விரும்பியவர்
   அ. பாரதி ஆ. பாரதிதாசன்
   இ. நாமக்கல்கவிஞர் ஈ. காமராசர்

10. 'பாரதி' எனும் சொல்லின் பொருள்
    அ. அரசு ஆ. கலை
    இ. கலைமகள் ஈ. புகழ்

## பகுதி - ஆ

## கீழ்வரும் வினாக்களுக்கு 200 சொற்களில் விடையளி

5 x 4 = 20

11.a. "விடுதலை வேண்டும்" என்ற பாரதவாசிக்கு ஆங்கிலேயர் கூறிய கருத்துக்கள் யாவை ?

(அல்லது)

11.b. திலகரின் பெருமைகளைச் சுட்டுக.

12.a. கடவுளைப் பற்றி ஞானிகள் கூறும் உண்மைச் செய்திகளை எழுதுக.

(அல்லது)

12.b. 'நித்ய வாழ்வு' கிடைக்க ஏசு கூறும் உபாயம் என்ன ?

13.a. திரௌபதி கண்ணனை நினைத்து கதறியழுததன் அவலத்தை விளக்குக.

(அல்லது)

13.b. பாஞ்சாலி சபதம் தமிழ்க்காப்பிய அமைப்பு முறையைத் தழுவியது என்பதை நிறுவுக.

14.a. குயில் கூறும் முற்பிறப்பு கதையினை எழுதுக.

(அல்லது)

14.b. பாரதியின் குயில்பாட்டு இயற்கையைப் போற்றுகிறது என்பதை மெய்ப்பிக்க.

15.a. அரசனாக கண்ணன் செய்த செயல்களை எழுதுக.

(அல்லது)

15.b. கண்ணனின் விளையாட்டுகளை எடுத்து இயம்புக.

## பகுதி - இ

## கீழ்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடையளி

5 x 7 = 35

16.a. பாரத தேசத்தின் பெருமைகளைக் கட்டுரை வடிவில் எழுதுக.

(அல்லது)

16.b. தமிழ் மொழியின் பெருமைகளைப் பாரதியார் எங்ஙனம் எடுத்தியம்புகிறார்.

17.a. பெண்விடுதலை பற்றி பாரதியின் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

(அல்லது)

17.b. பாரதியின் பக்தி மார்க்கத்தை விளக்கி வரைக.

18.a. "பாஞ்சாலி சபதம் பாரத மாதாவின் சபதமே" என்ற கூற்றை ஆய்வு செய்க.

(அல்லது)

18.b. பாஞ்சாலி சபதம் காட்டுகின்ற தத்துவக் கருத்துகளையும், நீதிகளையும் தொகுத்து எழுதுக.

19.a. குயிற்பாட்டு உணர்த்தும் உள்ளுறை பொருள்களை விளக்குக.

(அல்லது)

19.b. குரங்கிடமும், மாட்டிடமும் குயிற் பேசியவற்றைத் தொகுத்து எழுதுக.

20.a. கண்ணனை சேவகனாக பெற்றதால் அடைந்த நன்மைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

20.b. தாயின் பெருமைகளை பாரதியார் பாடல் வழி விளக்குக.

***********